# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# இரண்டு முறை வாழ்ந்த ஒரு பெண்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

யவீரு தேவனை வழிபட்டு மற்றவர்களுக்கு அவருடைய வார்த்தையை போதித்த ஒரு யூத மதத் தலைவனாயிருந்தான். ஒரு நாள், யவீருக்கு ஒரு பெரிய கஷ்டம் வந்தது.



அவளுடைய பிரியமான குமாரத்தி, பன்னிரெண்டு வயதானவள், வியாதிப்பட்டாள். யாராலும் அவளுக்கு உதவி செய்ய முடியவில்லை. அது ஒரு மோசமான வியாதியாயிருந்தது. அவள் மரிக்கும் தருவாயிலிருக்கிறாள் என்று யவீருக்கு தெரிந்தது.



ஒரே ஒருவரால் தான் யவீருவின் மகளுக்கு உதவி செய்ய முடியும். யவீரு இயேசுவைக் கண்டு அவரைத் தன்னுடைய வீட்டிற்க்கு அழைத்து வர முயற்சி செய்தான்.



தன்னுடைய மதத்தை சேர்ந்த மற்ற நண்பர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவனுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அவைகளைப் பற்றி யவீருவிற்கு கவலையில்லை. தன்னுடைய மகள் மரிக்கும் முன்



சீக்கிரமாக உதவியைப் பெற்று ஆகவேண்டும்.



இயேசுவை
சுற்றி ஜனங்கள்
நிற்பதை யவீரு
பார்த்தான்.
இயேசுவின்
பாதத்தில் அவன்
முழங்காற்படியிட்டான்.


"என் குமாரத்தி மரண
அவஸ்தைப்படுகிறாள்.

அவள் ஆரோக்கியமடையும்படிக்கு



நீர் வந்து, அவள் மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள்," என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.



இயேசு யவீரு உடன் சென்றார். ஆனால் ஜனக்கூட்டம் அதிகமாக இருந்ததினாலே அவர்கள் முன்னாலே போக முடியவில்லை. ஒரு ஸ்திரி பன்னிரெண்டு நீண்ட வருடங்களாக வியாதியாயிருந்தாள். அவள் அநேக வைத்தியர்களிடம் சென்றும் (தன்னுடைய பணத்தை எல்லாம் செலவு செய்தாள்) உதவி எதுவும் கிடைக்கவில்லை. ஓ! அவள் இயேசுவை பார்க்க எவ்வளவு ஆவலுள்ளவளாயிருந்தாள்.



அந்த பெண் என்ன செய்வாள்? "நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்," என்று தனக்குள் நினைத்தாள். அவள் இயேசுவின் அருகாமையில் சென்றாள். பின்பு, தன்னுடைய கைகளை நீட்டி, இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாள்.



ஒரு அற்புதம்! ஒரு ஆச்சரியம்!
அந்தப் பெண் சுகம் பெற்றாள்.
உடனே! பரிபூரணமாக! தான்
பூரணமாக, முழுவதும் சுகம்
பெற்றதை அவள் அறிந்தாள்.
பின்பு, ஒரு குரல் பேசியது.
"என்னை தொட்டது யார்?" இயேசு
கேட்டார். ஜனத்திரள் அவரைத்
தொட்டிருந்தது. சுகம்பெற்ற அந்தப்
பெண்ணுக்கு தெரிந்திருந்தது.
அவள் சுகமானதை அவரிடம்
தெரிவிக்க வேண்டும் என்பதாக.
நடுக்கத்துடன், தன்னுடைய
முழுக்கதையையும் அவள்
அவரிடத்தில் சொன்னாள்.



அப்போது தானே,
யவீருவின் வீட்டிலிருந்து
வேலைக்காரர்கள்
வந்தார்கள். அவர்கள் என்ன
சொல்லப் போகிறார்கள்
என்கிற கவலையான செய்தி
அவர்கள் முகத்திலிருந்து
வெளிப்பட்டது.
"உம்முடைய குமாரத்தி
மரித்துப்போனாள்" என்று
யவீருவிடம் சொன்னார்கள்.
மரித்துவிட்டாளா!

மிகவும் தாமதமாயிற்று. ஒருவேளை, அந்தப் பெண் தாமதப்படுத்தாவிட்டால் ... ஒருவேளை, என்றால் ... மரணம்! யவீருவின் அருமையான சின்னக் குமாரத்தி போய் விட்டாள்.



இயேசு அதை கேள்விப்பட்டபோது, அவர் பதிலளித்தார், "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அவள் சுகம் பெறுவாள்," உண்மையிலே இயேசுவை விசுவாசிப்பதற்கு யவீருக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கலாம். அவன் குமாரத்தி இறந்துபோனாள்.



வீட்டிலே, எல்லோரும் அழுது பிள்ளைக்காக துயரங்கொண்டாடினார்கள். "அவள் மரிக்கவில்லை, ஆனால் நித்திரையாயிருக்கிறாள்," என்று அவர்களிடம் இயேசு சொன்னார். அவர்கள் அவரைப்பார்த்து சிரித்தார்கள். அந்தப் பெண் குழந்தை இறந்துவிட்டது என்று அவர்களுக்கு தெரியும்.



இயேசு அவர்களையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு அந்த சிறுமியின் கையைப் பிடித்துச்சொன்னார், "சிறு பெண்ணே எழுந்திரு."



யவீரு அங்கே தான் இருந்தான். அவனுடைய மனைவியும் அங்கேதானிருந்தாள். இயேசுவின் மூன்று சீஷர்கள் அங்கே இருந்தார்கள். இயேசுவின் வார்த்தையை அவர்கள் கேட்டார்கள். அந்த சிறு பெண்ணும் அந்த சத்தத்தை கேட்பாளோ?



அந்த சிறு பெண்
இயேசுவின்
கட்டளையை
கேட்டாள்.
அவளுடைய
ஆவி திரும்பியது,
மற்றும் அவள்
உடனே
எழும்பினாள்.



அவளை
மரணத்திலிருந்து
இயேசு
எழுப்பியிருந்தார்.



அவளுடைய பெற்றோர்கள் ஆச்சரியப்பட்டார்கள், அந்த சிறு பெண்ணுக்கு சாப்பிட ஏதாகிலும் கொடுக்கும்படி இயேசு சொன்னார்.



அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமிருந்திருக்கலாம்;
அவர்கள் இயேசுவுக்கு நன்றியுள்ளவர்களாயிருந்திருப்பார்கள்.
அவருடைய ஆச்சரியமான அன்பும் வல்லமையும்
அந்தக்குமாரத்தியை மரணத்திலிருந்து
திரும்பக்கொண்டுவந்தது.



இரண்டு முறை வாழ்ந்த ஒரு பெண்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மாற்கு 5, லூக்கா 8

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16